காமராசர் மாவட்டம், இராசபாளையம் நகருக்கு மேற்கே உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் அய்யனார் கோவில் அருகேயுள்ள அருவியைச் சார்ந்த பகுதிகளைச் சுற்றுலாத் தலமாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காமராசர் மாவட்டம், இராசபாளையம் நகருக்கு மேற்கேயுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் அய்யனார் கோவில் அருகேயுள்ள அருவியைச் சார்ந்த பகுதிகளைச் சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை என்பதை சபைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. தளபதி.

திரு. கோ. தளபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள அய்யனார் கோவில், சதுரகிரி மகாலிங்க சுவாமி கோவில் போன்ற பகுதிகள் இயற்கை எழில் மிகுந்த பகுதிகள் ஆகும். அப்பகுதிகளுக்குச் சாலை அமைத்து, வசதி செய்து கொடுத்தால், மக்களுக்குப் பயன்தரக்கூடிய சுற்றுலாத் தலமாக அமையும் என்பதால் அரசு அதைச் செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரத்தைப் பொறுத்து அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 161, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

161--

ஒகேனக்கல்லை சுற்றுலாத் தலமாக்குதல்

*1352--**திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1996 ஆகஸ்ட் 10]

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல்லை வெளி நாட்டவர்களைக் கவரும் வண்ணம் சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல்லை வெளிநாட்டவர்களைக் கவரும் வண்ணம் சிறந்த சுற்றுலாத்தலமாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய ஒகேனக்கல் சுற்றுலா மையமானது தினமும் பல ஆயிரக்கணக்கானவர்கள் வருகை தரக்கூடிய ஒரு சிறந்த சுற்றுலா மையமாக இருக்கிறது. அது, தமிழ்நாட்டிலே இருக்கக் கூடிய பகுதிகளிலிருந்து மட்டும் அல்லாமல், இந்தியத் துணைக் கண்டத்திலே, ஆந்திரா, கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வரக்கூடிய ஒரு சுற்றுலாத் தலமாக இருக்கின்றது. அங்கே, எவ்வித அடிப்படை வசதியும் இல்லாமல் இருக்கிறது. தினந்தோறும், ஆயிரக்கணக்கானவர்கள் வரக்கூடிய இந்தச் சுற்றுலா தலத்திலே, அடிப்படை வசதிகளான கழிப்பிட வசதிகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் கிடையாது. இன்னும் கடை வளாகங்கள் எல்லாம்கூட அமைக்காமல், சின்ன சின்ன குடிசைகளைப் போட்டு அதிலே கடை வைத்திருக்கிறார்கள். காற்று, மழை வரக்கூடிய நேரத்தில் அதெல்லாம் அடித்துச் செல்லப்படுகிறது. கடந்த ஆடிப்பெருக்கு விழாவிலேகூட பல லட்சக்கணக்கானவர்கள் கூடினார்கள். போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த ஏராளமான பேருந்துகள் வந்தன. கட்டுக்கடங்காத கூட்டத்தின் காரணமாக, அங்கே கூடியிருந்த நெரிசலை, காவல்துறை சமாளிப்பதுகூட கடினமாக இருந்தது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேள்விக்கு வாருங்கள்.

திரு. ஜி.கே. மணி: ஆகவே, இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த சுற்றுலாத் தலத்தை, அரசு மனமுவந்து, அடிப்படை வசதிகளைக் கொண்ட சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையோடு, மாண்புமிகு சுற்றுலாத்

துறை அமைச்சர் அவர்கள் விரைவில் நடவடிக்கை மேற்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் பகுதிகளில் தற்போது காவிரி ஆற்றின் குறுக்கே, தொங்கு பாலம் அமைப்பதன் மூலம் ஒகேனக்கல் நீர் வீழ்ச்சிப் பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை செய்து, அப்பகுதியிலுள்ள அந்த சுற்றுலாத் தலத்தை மேம்பாடு அடையச் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக, 25 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளை, நிதி ஆதாரத்தைப் பொறுத்து, அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சொக்கர்.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மட்டும் சுற்றுலா வளர்ச்சிக்காக 23 கோடி ரூபாய் மானியமாக மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. ஏதாவது திட்டங்களைப் போட்டு அனுப்புங்கள், 23 கோடி ரூபாய் கடந்த 1 ஆண்டில் மட்டும் தமிழக அரசுக்கு நாங்கள் மானியமாகத் தருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால், இங்கிருந்து திட்டங்கள்கூடப் போட முடியாமல், அந்தப் பணத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியாமல் போய்விட்டது அரசின் கவனத்திற்குத் தெரியுமா? இந்த ஆண்டு அதுபோன்று வரக்கூடிய மானியங்களை நாம் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய அளவிலே, நாம் திட்டங்களைத் தயாராக வைத்திருக்கிறோமா? அப்படி தயாராக வைத்திருக்கும் பட்சத்தில் சிவகாசி தொகுதியிலுள்ள வெம்பக்கோட்டை நீர்த்தேக்க பகுதியையும், இராஜபாளையம் அய்யனார் நீர் வீழ்ச்சிப் பகுதியையும் சுற்றுலாத்தலமாக அமைத்து, இந்த அரசு அந்தத் தொகையை அதற்கு செலவிட்டு, சுற்றுலாத்தலமாக மாற்ற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஸ்ரீவில்லிபுத்தூருக்கு சேர்த்துக் கேட்டிருந்தால் பரவாயில்லை. (சிரிப்பு)

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு

1996 ஆகஸ்ட் 10]

மானியக் கோரிக்கையின் போது விடை அளிக்கப்படும் என்பதை இந்தச் சபைக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இ. ஜி. சுகவனம்.

முற்பகல் 10-25

திரு. இ.ஜி. சுகவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கலில் உள்ள அரசு சுற்றுலா விடுதியாகிய ஹோட்டல் தமிழ்நாடு, அறைகள் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளதால், வெளியூரிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் அங்கே தங்குவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே வெளியூரிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் வசதிக்கேற்ப அந்த சுற்றுலா விடுதியை விரிவுபடுத்தித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

டாக்டர் காஞ்சனா கமலநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுற்றுலாப் பயணிகளுக்கு மிக முக்கியமாக அரசாங்கம் அமைத்துக் கொடுக்க வேண்டியது அங்கே பெண்கள் குளிக்கின்ற அந்த நீராடுதுறையில், உடை மாற்றுவதற்கு அறைகள். தயவு செய்து அதனை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சர் அவர்களுடைய துறை முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடை மாற்றுவதற்குத் தனியாக இடம் இருந்தால் போதும். பெண்கள் குளிக்கின்ற இடத்தில் எல்லாம் பல பேர் போய் தகராறு செய்துகொண்டிருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு என்று ஒரு தனிப் பகுதியை அமைத்து ஒரு மறைவிடமாக நம்முடைய சுற்றுலாத்துறை செய்ய முன்வருமா என்று கேட்டு, மோட்டல் கட்டுவதற்கு வேலூருக்கு சென்ற ஆண்டு

பணம் ஒதுக்கப்பட்டது என்ன ஆனது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், கேள்வியைக் கேளுங்கள், அமைச்சர் சொல்ல வேண்டிய பதிலை நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா வருவோரினுடைய எண்ணிக்கையைப் பொறுத்து மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 162, திரு. இரா. பொன்னார்டு, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

162--

தூண்டில் வளைவு அமைத்தல்

*1105-திரு. இரா. பொன்னார்டு:

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் தேவைப்படும் இடங்களில் தூண்டில் வளைவு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வள்ளம் மற்றும் கட்டுமர மீனவர்களின் கோரிக்கையான தூண்டில் வளைவு என்னும் தடுப்புச்சுவரை கட்டுவது பற்றிய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பெங்களூரிலுள்ள மத்திய கடலோர பொறியியல் நிறுவனம் தக்க சாத்தியக்கூறுகள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ள கோரப்பட்டுள்ளது. அங்கிருந்து பரிசீலிக்கப்பட்டு அறிக்கை வந்தவுடன் கட்டுவது பற்றி தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.